பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 21 புதன்கிழமை 05 08 1992 UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 251

# புலிகள் சுற்றி வளைத்து அதிரடி; வவுனியாவில் 15 படையினர் பலி!

## முன்னேறும் முயற்சி முறியடிப்பு; கவச வாகனம் முற்றாக அழிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 5

வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரப்பமடு என்னும் இடத்தில் தங்கள் நிலையில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினரை, விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

45 நிமிட நேரம் நீடித்த அந்தத் தாக்குதலில் 15 படையினர் கொலையுண்டனர். நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கவச வாகனம் ஒன்று புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணமடைந்தார்.

நேற்றுக் காலை 7.35 மணியளவில் வவுனியா பிரப்பமடு இராணுவ முகாமில் இருந்து ஒரு ''பவள்'' கவச வாகனத்துடன், இருபதுக்கும் மேற்பட்ட படையினர் தமது நிலையில் இருந்து முன்னேற முயன்றனர்.

தடைகளை அகற்றியவாறு சுமார் 150 யார் தூரத்துக்கு அவர்கள் முன்னேறி இருப்பர்.

அவ்வேளை விடுதலைப் புலிகள் அவர்களைச் சுற்றி வளைத்துத் தமது அதிரடியைத் தொடங்கினர்.

இத்தாக்குதல் சுமார் 45 நிமிட நேரம் நீடித்தது. உக்கிரத் தாக்குதலின்போது 14 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்: மற்றும் ஒருவர் பின்னர் மரணமானதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஆக: 5

வவுனியாவில் விடுதலைப் புலிகள் படையினர் மீது நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு;-

| | |
|---|---|
| ★ எல் - 3 ரக இலகு இயந்திர துப்பாக்கி | — 02 |
| ★ அதற்குரிய ரவைகள் | — 330 |
| ★ ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கி | — 01 |
| ★ அதற்குரிய றம் ரவைக் கூடுகள் | — 04 |
| ★ அதற்குரிய லிங் | — 475 |
| ★ ஜி-3, ஏ-3 ரக துப்பாக்கிகள் | — 07 |
| ★ அதற்குரிய ரவைக் கூடுகள் | — 29 |
| ★ ரி-56 ரக துப்பாக்கிகள் | — 06 |
| ★ ஏ. கே. ரக துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் | — 20 |
| ★ ரவைக்கூடு தாங்கிகள் | — 10 |
| ★ நடுத்தர ரவைகள் | — 383 |
| ★ நேட்டோ ரவைகள் | — 128 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டுகள் | — 03 |
| ★ ரி. என். டி. கைக்குண்டு | — 01 |
| ★ தொப்பிகள் | — 05 |
| ★ சப்பாத்து | — ஒரு சோடி |
| ★ பட்டிகள் | — 03 |
| ★ பை | — 01 |

## திட்டமிட்ட கரந்தடி உத்தியால் புலிகளுக்கு வெற்றி கிட்டுகிறது

### பி. பி. ஸி. விமர்சனம்

லண்டன், ஆக. 5

திட்டமிட்ட கரந்தடி உத்தியாலும் அதன் பிரயோகத்தாலும் விடுதலைப் புலிகளுக்கு இப்போது போரில் வெற்றிகள் கிட்டி வருகின்றன.

இவ்வாறு வடக்கு - கிழக்குப் போர் நிலைமை குறித்து பி. பி. ஸி. நேற்றைய தனது விமர்சனத்தில் தெரிவித்தது.

அந்த விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:-

நாளுக்கு நாள் கொல்லப்படும் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. விடுதலைப் புலிகள் நகரப்புறத்திலும் தமது அதிரடித் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளனர்.

இது, விடுதலைப் புலிகளின் கோட்டையான யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவும், அவர்களை வெளியேற்றவும் விடுதலைப் புலிகள் கையாளும் யுத்தியாகும் என்று கருதப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு முறைகள் தாக்குதல்கள் மேற்கொண்டதன் விளைவாகவும் இது இருக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் மீது படையினர் மேற்கொண்ட இறுதித் தாக்குதலின் போது எவ்வளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டனரோ, ஏறக்குறைய அதே அளவு படையினர் கடந்த வாரங்களில் நடந்த சண்டையில் புலிகளால் கொல்லப்பட்டனர்.

இது அனுபவம் மிக்க இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைத் தேர்தல்கள் நிறுத்தம்

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த, செஞ்சிலுவைச் சங்க உதவி அரச அதிபர் பிரிவுக் கிளைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டாம் என்று புதிதாகப் பொறுப்பேற்றுள்ள செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் இடைக்கால சபை பணிப்புரை வழங்கியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிர்வாகத்தை பொறுப்பேற்றுள்ள புதிய சபைக்கு கிடைத்த சில முறைப்பாடுகளை அடுத்தே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய இடைக்கால சபை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினையில் பிரதமர் ராவின் கருத்து

### இந்தியத் தூதுவர் வெளியிட்டார்

இலங்கையில் தமிழர்களுக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும். அது ஐக்கிய இலங்கைக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட வேண்டும்;

இவ்வாறு பிரதமர் பி. வி. நரசிம்மராவ் புதுடில்லியில் தம்மிடம் தெரிவித்ததாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. என். என். ஜா தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் இருந்து கொழும்பு திரும்பும் வழியில் திரு. ஜா நேற்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையிலேயே முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் இருந்து வெளியேறக் கட்டாயபடுத்தப் படமாட்டார்கள் — என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்துத் தாம் பிரதமர் நரசிம்மராவிடம் எடுத்துக் கூறியதாகவும் திரு. ஜா தெரிவித்தார். (அ-எ)

## விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் ஆதரவு அதிகரித்து வருகிறது

### காங்கிரஸ் தலைவர்கள் கவலை

சென்னை, ஆக. 5

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இயக்கங்களின் செயற்பாடுகள் தமிழகத்தில் அதிகரித்து வருவதாக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் நடவடிக்கைகளும் மாநிலத்தில் அண்மைக் காலமாக தீவிரமடைந்தும் அதிகரித்தும் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளும் ஏறக்குறைய பழைய நிலைக்கே வந்துவிட்டதாகவும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் மாநில அரசும், பொலீசாரும் மெத்தனம் காட்டி வருவதே இதற்குக் காரணம் என்றும் திரு. பாலசுப்பிரமணியம் குற்றஞ் சாட்டினார்.

மாநில காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் இதே குற்றச்சாட்டைத் தெரிவித்தார். (அ-எ)

## கொழும்பு செல்வோருக்கு யாழ். நகரிலிருந்து பஸ்கள்

### முத்திரைச் சந்தியிலிருந்து மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 5

கொழும்பு செல்லும் பயணிகளுக்கென நல்லூர், முத்திரைச் சந்தைப் பகுதியிலிருந்து நடைபெற்று வரும் பஸ் சேவைகள் விரைவில் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து நடைபெற இருப்பதாக வடபிராந்திய சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

கொழும்புப் பயணிகளுக்கான ஆசனங்களைப் பதிவு செய்யும் அலுவலகம் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் யாழ். பஸ் நிலையத்திலுள்ள விளம்பர சேவை அலுவலகத்திற்கு கீழே அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கும் என்றும் அறிய வந்துள்ளது. (அ-த)

## 'டுவோரா' அதிவேக படகுகள் தரிக்க வடக்கில் தளவசதிகள் இல்லையாம்

கொழும்பு, ஆக. 5

ஸ்ரீலங்கா கடற்படையிடம் உள்ள 'டுவோரா' (Dvora) அதிவேக படகுகள் தரித்து நிற்கக்கூடிய தளவசதிகள் வட பகுதியில் இல்லை.

ஸ்ரீலங்கா கடற்படையின் ஓய்வுபெற்ற அதிகாரி லெப்டினன்ட் கொமாண்டர் எஸ். ஹேமச்சந்திரா, பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் ஜி. பி. கிரவாலா ஆகியோர் தயாரித்து வெளியிட்ட ஆய்வுக் கட்டுரை ஒன்றில் முன்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

''ஸ்ரீலங்கா கடற்படையின் விரிவுபடுத்தப்பட்ட பங்கும், அது எதிர்நோக்கும் புதிய சவால்களும்'' என்ற தலைப்பில் இக்கட்டுரை வெளியிடப் பட்டிருக்கிறது.

கடல் கண்காணிப்பின் முதுகெலும்பாக 'டுவோரா' அதிவேகப் படகுகள் [illegible]ளது. ஆனால் இந்த அணியில் உள்ள பெரும்பாலான 'டுவோரா' படகுகள் திருகோணமலையைத் தளமாகக் கொண்டே இயங்குகின்றன. முறையான தளவசதிகள் வட பகுதியில் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

இதன் காரணமாக - கூடுதல் எரிபொருள் பாவனை, தேவையற்ற விதத்தில் பல மணித்தியாலங்கள் [illegible]

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்தில் விஷக் குண்டு வீச்சா!
எதிரியே உனக்கென்று வேறான காற்றா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் கூடுதல் நிதி கேட்கிறது; தேயிலை வருமானமோ வீழ்ச்சி!

## ரூ. 500 கோடி துண்டு விழுவதால் நெருக்கடி

கொழும்பு, ஆக. 5

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களில் முதலிடம் வகித்து வந்த தேயிலை இந்த ஆண்டு மூன்றாவது இடத்துக்கு தள்ளப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள கடும் வீழ்ச்சி காரணமாக தேயிலை ஏற்றுமதியால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் வருமானத்தில் குறைந்தது 500 கோடி ரூபா துண்டு விழும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதனால் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் திறைசேரிக்கு மேலும் அழுத்தம் உருவாகும் என்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

''அரசாங்கச் செலவினத்துக்குத் தேவையான பணத்தைக் கண்டு பிடிப்பது போன்ற சொந்தப் பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ள திறைசேரிக்கு, தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி காரணமாக ஏற்படும் 500 கோடி ரூபா பற்றாக்குறை, வரவு - செலவுத் திட்ட நெருக்கடியைக் கொடுக்கப் போதுமானது'' — என்று தனியார் துறை நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

''பாதுகாப்புச் செலவினத்துக்கும் ஜனசக்தி திட்டத்துக்கும் தேவையான நிதியை பெற்றுக் கொள்ளும் பிரச்சினைகளை அரசு எதிர்நோக்கியுள்ளது.

இதுவரை இந்த ஆண்டில் 1900 கோடி ரூபா வரை பாதுகாப்புச் செலவினமாக இருந்துள்ளது. பாரிய செலவில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த செலவினம் மேலும் அதிகரிக்கவிருக்கின்றது'' — என்றும் அந்தனியார் துறை பொருளாதார நிபுணர் தெரிவித்தார்.

போர் முனையில், யாழ். குடா நாட்டைக் கைப்பற்றுவது போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடுதல் நிதியை ஒதுக்கும்படி இராணுவம் கோரி வருகின்றது. பணம் இல்லாததன் காரணமாக நிதி கோரும் புதிய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் திறைசேரி தத்தளிக்கிறது என்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (அ-எ)

## அரச அதிபர் பணம் செலுத்துவார்

மாணவர் உணவு முத்திரைக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் இதுவரை காலமும் விநியோகிக்கப்பட்டு வந்த பொருள்களுக்குரிய பணம் அரச அதிபரால் மீளச் செலுத்தப்படும்.

நேற்றுக் காலை கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அரச அதிபர் இதனைத் தெரிவித்தார்.

## மாணவர்களுக்கு ம. எண்ணெய் விநியோகம்

ஜி. சி. ஈ. உயர்தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு, ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆளுக்கு இரண்டு லீற்றர் மண்எண்ணெய் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது.

மாணவர்களின் நலன் கருதி தாம் இச்சேவையைச் செய்வதாக பிரஸ்தாப கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 5

நல்லூர் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு இன்று 5 ஆம் திகதி புதன்கிழமை ஆலயச் சுற்றாடலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் [மாலையில்] திரு. எஸ். செல்லத்துரையின் இசைக்கச்சேரி;

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] — ''கானசுதா வாரிதி பிரம்ம ஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''பார்வதி தவம்'' என்ற பொருளில் கந்தபுராணக் கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் - பிற்பகல் 2 மணிக்கு — கந்த புராணப் படிப்பு; பிற்பகல் 3 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [அ-30-126]

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பாடசாலை அபிவிருத்திச் சபை**

கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சபைக்குப் பெற்றோர் பிரதிநிதிகள் மூவரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் 09 - 08 - 1992 ஞாயிறு பி. ப. 3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர் மட்டுமே இக் கூட்டத்திற்கு வருகை தர முடியும்.

தவறாது வருகை தருக

அ. பஞ்சலிங்கம்.
அதிபர்

27-7-92

[சி-3019]

---

**நாவலர்**

சித்தன்கேணி

**94 A/L கலை, வர்த்தகம்**

புதிய பிரிவு 09-08-1992 ஆரம்பம்

வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. ஸ்ரீகாந்தன்
பொருளியல் — திரு. கலாகரன்
அளவையியல் — திரு. சயந்தன்
தமிழ், இந்து நாகரிகம் — திரு. செங்கா

**93 A/L**

பொருளியல்

பகுதி II ஆரம்பம்:- 08-08-92

செல்வி நிலுவை

K. கலாகரன்

(சி/2999) சனி, ஞாயிறு 5 — 6

---

**நிரு ரியூசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

**A/L 93**

நீர்நிலையியல் தொடர்கள்

செவ்—வியாழன் 6 – 8

திரு. கமலசிங்கம்

[C/3000]

---

**O/L 92**

PAPER CLASSES

கடந்த 5 வருட O/L பரீட்சை வினா - விடை வகுப்புக்கள்

ஆரம்பம்:
06 — 08 — 1992
காலை 9-00 மணி

குறிப்பு: விடுமுறை காலமாக இருப்பதால் செவ்வாய், வியாழன் நாட்களில் காலை 9-00 — 1-00 மணி வரை வினா-விடை வகுப்புக்கள் நடைபெறும்.

O/L பகல்நேர, மாலை நேர மீட்டல் புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[இ/3012]

---

**ஜெப நிலையம் அசம்லி ஒப் கோட்**

சங்கரப்பிள்ளை வீதி, — மானிப்பாய்.

**ஆன்மீக விடுதலை ஆராதனைகள்**

திகதி: 05 - 08 - 92 — 09 - 08 - 92
புதன் முதல் ஞாயிறு

நேரம்: காலை 8 - 30 — 1 - 30
ஜெபம் / உபவாசம், ஜீவ பாடம்

மாலை: 4 - 00 மணி ஆன்மீக பாடல்கள்
தேவ செய்தி

வியாதியா? வாழ்க்கை பிரச்சினையா? அர்த்தமில்லாத வாழ்க்கையா? பிசாசின் பிடியா?

யேசு இன்று பதில் தருகிறார்

பிரவேசம் இலவசம்

எல்லோருக்கும் ஜெபம் செய்யப்படும்.

(5227)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**பொதுசன நூலக அபிவிருத்தி**

யாழ் மாநகர நூலகத்தில் நூல் வளத்தைக் கணிசமான அளவு அதிகரிக்கும் பொருட்டு, போதியளவு நூல்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் சிபார்சு செய்யும் நூல்களுக்கு முன்னுரிமை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மாநகர எல்லைக்குள்ளும், அப்பாலும் வதியும் அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், பொதுத் தாபனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களிடமிருந்தும், நூலக வாசகர்களிடமிருந்தும், அவர்கள் விரும்பும் நூல்கள் தொடர்பான பூரண விவரங்களை (புத்தகத்தின் பெயர், எழுதியவர் பெயர், பிரசுரிப்பாளர்) உள்ளடக்கிய பட்டியல்களை 20 - 08 - 92 வியாழக்கிழமைக்கு முன்பதாக எனக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி

வே. பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-08-1992.

[சி - 3010]

---

**நிரு ரியூசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

**A/L 93**

வரவுசெலவுத் திட்டம்

தேசிய வருமானம்

சனி, ஞாயிறு—4—5

**A/L 94 பிரிவு II**

ஆரம்பம்; 09—08—92
ஞாயிறு காலை 6 மணி

ஆசிரியர்: திரு. உதயன்

[C/3101]

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

இப்புவியில்:
04—02—1921



இறையடியில்:
05—05—1992

**அமரர் நாகமுத்து நாகலிங்கம்**

வேலணை — 5

சிற்பனை வீதி விசாலிப்பு, சிற்பனை முருகன் ஆலய புனரமைப்புப் போன்ற பொதுப்பணிகள், இறை பணிகள் ஆற்றியும் இன்சொல்லால் இருகரம் அரவணைத்தும் எம் கிராம மக்களின் உளம் தொட்டுநின்றீர்கள்! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை மேற்கு
அன்பர்கள்

[22041]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான வீடுகள் வலி-வடக்கில் தரைமட்டம்!

## இராணுவம் இடித்துத் தள்ளுகிறது!!

தெல்லிப்பழை, ஆக. 5

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினர் ஆயிரக்கணக்கான வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கி உள்ளனர். தொடர்ந்தும் மக்கள் வாழ்ந்து வந்த குடியிருப்புகளை அழித்து வருகின்றனர்.

இதனை நிறுத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபரையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவையும் கேட்டுக்கொள்ள முடிவாகியுள்ளது.

வலி-வடக்கு புனர்வாழ்வு அமைப்புக் குழுவின் கூட்டம் திரு. எஸ். கந்தசாமி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பராயில் நடைபெற்றது. அங்கு வலி-வடக்கில் பலகோடி ரூபா பெறுமதியான பெரும் எண்ணிக்கையான வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு வருவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இப்போதும் வீடுகள் அழிக்கப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.

இந்த அழிவு வேலையை நிறுத்துவதற்குச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு அரச அதிபரையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பொறுப்பு அதிகாரியையும் நேரில் சந்தித்துக் கேட்பதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திரு. எஸ். கந்தசாமி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்வரும் தகவல்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டன:-

★ 1987, 1988 ஆம் ஆண்டுகளிலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது உடைக்கப்பட்டும் பின்னர் புதிதாக அமைக்கப்பட்டும், புனரமைக்கப்பட்டும் மக்கள் வாழ்ந்த வீடுகள் திரும்பவும் இப்போது அழிக்கப்பட்டுள்ளன; அழிக்கப்படுகின்றன.

★ விவசாயிகளின் வெற்றிலைக் கொழுந்து மற்றும் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் மக்கள் பயன்பெற முடியாதவாறு நாசமாக்கப்பட்டுவிட்டன.

★ கடற்றொழிலாளர்களின் பல கோடி பெறுமதியான தொழில் கருவிகள், இயந்திரங்கள் சேதமாக்கப்பட்டு விட்டதால், அவர்கள் மீளவும் அத்தொழிலைச் செய்ய முடியாதவாறு நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது.

★ பல வணக்க ஸ்தலங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன; கைத்தொழில் நிலையங்களும் நாசமாக்கப்பட்டுள்ளன.

★ வலி-வடக்கின் பல ஊர்கள் — கிராமங்கள் — இப்போது வனாந்தரமாகக் காட்சி அளிக்கின்றன.

(அ-68)

## அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மட்டக்களப்பு செல்கின்றனர்

கொழும்பு. ஆக. 5

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று இம் மாதம் 8ஆம் திகதி மட்டக்களப்பு செல்லவுள்ளது. புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிடுவதற்காக இக் குழு செல்கிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் கிறிஸ்ரி சில்வாவும் அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகளும் இக் குழுவுடன் செல்லவுள்ளனர்.

அகதி முகாம்களுக்கு இக் குழு விஜயம் செய்வதுடன், மட்டக்களப்பு அரச அதிபர் திரு. மோனகுருசாமி தலைமையில் நடைபெறவுள்ள மாநாட்டிலும் இக் குழு உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

[ஒ-எ]

## மடுத்திருப்பதி திருவிழா

கொழும்பு, ஆக. 5

மன்னார் மாவட்டம்-மடுத் திருப்பதியில் ஆகஸ்ட் திருவிழா நாளை 6ஆம் திகதி ஆரம்பமாகிறது. மடுத்திருப்பதி பரிபாலகர் அருள்திரு. ஏ. யேசுராசா இதனைத் தெரிவித்துள்ளார்.

[ஒ-எ]

## வங்கி வாடிக்கையாளர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 5

முல்லைத்தீவு. பரந்தன் இலங்கை வங்கிக் கிளைகள் கடந்த ஒரு மாத காலமாக முழு அளவில் இயங்கவில்லை என்றும், இதனால் அங்கு வங்கி வாடிக்கையாளர்கள் பெரும் ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு கிளைகளும் இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த சில காலமாக கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையிலேயே இயங்கி வந்தன.

ஆனால் மேற்படி கிளைகளைச் சேர்ந்த ஊழியர்களில் பலர் குடாநாட்டில் இருந்து கிளாலி பாதையை காரணம்காட்டி அங்கு செல்லாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதனாலே வங்கி வேலைகள் பாதிக்கப்பட்டு வேலைகள் அரைகுறையாக நடந்து வருவதாக வாடிக்கையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

(ஒ-126)

## மோசடியைத் தடுக்கவே புதிய ரக பாஸ்போர்ட்!

### கட்டுப்பாட்டாளர் தகவல்

கொழும்பு, ஆக. 5

பாஸ்போர்ட் மோசடிகளை முறியடிப்பதற்காக சர்வதேச இன்டர்போல் பொலீஸாரின் சிபார்சுக்கமையவே இலங்கையில் புதிய ரக பாஸ்போர்ட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் திரு. வோல்டர் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய ரக பாஸ்போர்ட்டுக்களை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் நேற்று முன்தினம் முதல் வழங்க ஆரம்பித்துள்ளது. புதிய ரக பாஸ்போர்ட் இயந்திரங்கள் மூலம் சரி, பிழைகளைக் கண்டறியக் கூடியதாக இருக்கும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வழங்கப்படும் பாஸ்போர்ட்டுகளின் தரத்திற்கு ஏற்ப இலங்கையின் புதிய ரக பாஸ்போர்ட்டுகள் அமைந்திருக்கின்றன என்றும் —

இதனால் உலக நாடுகளில் இலங்கை பாஸ்போர்ட்டுகள் சந்தேகத்திற்கிடமானவையாக இனிமேல் கருதப்பட மாட்டா என்றும் கட்டுப்பாட்டாளர் கூறினார்.

இதற்கிடையில் —

இனிமேல் கடவுச் சீட்டுக்களுக்கு விண்ணப்பிப்போர் 4.5x3.5 சென்ரி மீற்றர் அளவுடைய புகைப்படங்களையே சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட பாஸ்போர்ட்டுகள் அவற்றின் முடிவுக் காலப் பகுதி வரை செல்லுபடியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-10]

## சைவ சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை, ஆக. 5

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வருடா வருடம் யாழ். மாநகராட்சி மன்றத்தினால் நடத்தப்படும் சைவசமய அறிவுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய அறிவுப் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ-30]

## அமைச்சர் மன்சூர் பிரேமாவுக்கு அறிக்கை

காத்தான்குடி மக்களை எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகள், அவற்றுக்குத் தீர்வுகாணும் வழிவகைகள் பற்றிய, யோசனைகள் பற்றிய அறிக்கை ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், மட்டக்களப்பு முன்னாள் எம். பி. றிஸ்வி சின்ன லெப்பை ஆகிய இருவரும் கையளிக்க இருக்கின்றனர்.


C. C. A. யாழ்ப்பாணம்

A/L 93

பொருளியல் - திரு. உதயன்

வரவு-செலவுத்திட்டம் தேசிய வருமானம்

உற்பத்திக் காரணிகள்

ஆரம்பம்:- 08 08 1992

சனி, ஞாயிறு 8 - 9 மணி

(சி/2993)



10ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்



★ வீரசிங்கம் துஷ்யந்தி ★

வீரசிங்கம் - புஸ்பராணி தம்பதியினரின் அருமைப் புதல்வி துஷ்யந்தி தனது 10வது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக தனது இல்லத்தில் இன்று [05-08-1992] புதன்கிழமை கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், பிறேமதாஸ் (கனடா), விமலதாசன் (லண்டன்), விஜயதாசன், சிவதாசன், ஜெயதாசன், மாமாமார், ஆனந்தராசா [கனடா], மகேந்திரராசா [கனடா], தங்கராசா, திலகராசா, மாமிமார், சித்திமார், அம்மம்மா, சித்தப்பாமார், அக்காமார், உற்றார், உறவினர், நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

– வீரசிங்கம் குடும்பத்தினர்.

''புஸ்பமகால்'',
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(2202)



G. A. Q.

1st in Com.

யாழ்.

1992/93

பேராதனை

பல்கலைக்கழகங்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு!

S. அருள்நங்கை,

புதிய உயர் கல்லூரி,

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(இ-2990)



யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை

பழைய மாணவர் சங்கம்

பொதுக்கூட்டம்

இடம்:- மேற்படி பாடசாலை மண்டபம்

காலம்:- 09-08-1992 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-00 மணி

இப்பாடசாலையில் படித்த பழைய மாணவ, மாணவியர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— செயற்குழு.

மூளாய்,
சுழிபுரம்.

(5223)



C. C. A. யாழ்ப்பாணம்

கலை, வர்த்தகக் கல்லூரி

வெலிங்டன் சந்தி அருகாமை

A/L 93

வார இறுதி மாலை நேர வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் 2 — 3 | — | திரு. உதயன் (செம்மதி நிலுவை) |
| கணக்கியல் 3 — 4, 4 — 5 | — | திரு. ஸ்ரீ (ஒற்றைப் பதிவு கம்பனி) |
| வர்த்தகம் 5 — 6 | — | பிரபல ஆசிரியர் (மூலதன சந்தை) |
| அளவையியல் 12 — 1 | — | திரு. சயந்தன் (குறியீட்டு அளவையியல்) |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை (அபிவிருத்தி புவியியல்) |
| இந்து நாகரிகம் 1 — 2 | — | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவம் | — | திரு. அமலதாஸ் |

ஆரம்பம்: 08 - 08 - 1992
(சனி) மாலை 2 மணி

[இ-2995]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் கோயிலை முன் வாசலில் அமைந்திருக்கும் எமது அண்ணா கோப்பி நிலையத்தில் உங்களுக்குத் தேவையான குரக்கன் மா, ஆட்டா மா, அரிசி மா, உழுந்து மா, மிளகாய்த்தூள், கோப்பித் தூள், தேயிலை, இனிப்பு வகைகள் ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளுங்கள், அண்ணா தொழிலகம், இணுவில். [சி-2988]

செபமாலைகள், செபப் புத்தகங்கள், தூபக் குமஞ்சான், தோலகட்டி நெல்லிரசம், அம்புப்பாய் விற்பனைக்குண்டு. ஆவே மரியா புனித இந்தாந்திரை மாதா கைத்தொழில் நிலையம், இல. 69/14, மவுண்கார்மல் றோட், குருநகர், யாழ்ப்பாணம். (22038)

## வகுப்புகள்

City and Guilds of London Institute Part II Quantity Surveying - 1993 வகுப்புகள் 05 - 08 - 1992 புதன்கிழமை காலை 6-30 — 8-30 ஆரம்பமாகின்றன. Measurement திங்கள் - புதன் Estimating and Analysis of Prices செவ்வாய்-வியாழன். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, நாவடி. (21989)

## கருட புராணம்

பெரிய எழுத்து ஸ்ரீ கருட புராண வசனம் படங்களுடன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2989]

## KARATE CLASSES

Karate Classes are Conducted by Master S. Tharmarasah, (2nd Dan Black Belt) Representative of the Shotokan Karate Association of Sri Lanka Venue: T. Y M. H. A. (Hall) Thrunelvely Junction. [22028]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை; ஆனந்தா சோதிட நிலையம், 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரம் - தினமும் பி. ப. 2 முதல் 6 வரை. [22007]

## மாணவர்களுக்கு பரிசு

மயிலணி, ஆக 5

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மிகவும் திறமையுடன் சித்தியடைந்த மல்லாகம் மகாவித்தியாலயத்தின் இரண்டு மாணவர்களுக்கு இவ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு வி. மகாதேவா பணப்பரிசு வழங்கினார். மாணவர்களுக்கு முறையே, ஆயிரம் ரூபாவும், எழுநூற்று 50 ரூபாவும் அவரினால் வழங்கப்பட்டது (த- 89)

## ஐவருக்கு பதவி உயர்வு

யாழ். செயலகத்தில் மத்திய அரசின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் 5 பேருக்கு தரம் இரண்டு பதவி உயர்வு கிடைத்துள்ளது.

இவர்களின் பதவி உயர்வுக்கான கடிதங்கள் யாழ். அரச அதிபரினால் வழங்கப்பட்டன. [இ-100]

---


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

★ இசை மாலை ★

இடம்: அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி. இன்று 05 — 08 — 1992

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம். நாளை 06 — 08 — 1992

காலம்: இரவு 8-30 மணி

நுழைவுச் சீட்டுக்கள்:

ரூபா 100-/ இருவருக்குரியது.
ரூபா 50/-, 25/- தனி ஒருவருக்குரியது.
ரூபா 10/- பாடசாலை மாணவர்களுக்குரியது.

ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

"செஞ்சோலை"
நிர்வாகத்தினர்.

[சி-3011]


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 02 — 1920

மறைவு: 05 — 08 — 1991

அமரர்

### யோசவ் அந்தோனிப்பிள்ளை

[சாம்பின் மாஸ்ரர்]

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எல்லோருக்கும் ஆதரவாய், பாசத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே! தங்கள் சிரித்த முகமும், இனியபேச்சும், எமது இதயத்தைவிட்டு ஒருபோதும் அகலாது.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 15, சந்தனமாதா கோவில் வீதி, பாண்டியன்தாழ்வு. (22031)

## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



தாய் மடியில்: 29 — 10 — 1958

இறை அடியில்: 09 — 08 — 1989

அமரர்

### டாக்டர் (செல்வி) சிங்கநாயகம் கலாநாயகி

(B S.M.S யாழ். பல்கலைக்கழகம், கைதடி)

ஆண்டுத் திதி: 05 - 08 — 1992

துயர் துடைக்கும் மொழியதனைச்
சேர்ந்து வரும் சிரிப்பதனை - உன்
பண்பான குணமதனை காலமெல்லாம்
கண்டிருக்க நாம் நினைத்தோம்!
உயிர் காக்கும் வைத்தியராய்
உலா வருவாய் என்றிருந்தோம்!
உயிர் பறிக்கும் காலனவன்
உனைக் கவர்ந்து சென்றதேனோ?
காவிய மாகி விட்ட 'கலா' உன்னை
எங்கள் நெஞ்சத்தில் இருத்தி வைத்து
உன் நினைவாலே வாழ்கின்றோம்!!

தாய், சகோதரர்கள்.

பலாலி தெற்கு, வசாவிளான். [21997]

---

# தமிழ்மொழி அமுலாக்கலில் அக்கறை செலுத்த வேண்டும்

## ஜனாதிபதி பிரேமா சொல்கிறார்

கொழும்பு, ஆக. 5

தமிழ் மொழி அமுலாக்கலில் அரச அதிகாரிகள் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா கூறினார்.

கடந்த திங்கள் மாலை நடைபெற்ற ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் திரு. பிரேமதாஸா இதனைத் தெரிவித்தார்.

அரச திணைக்களங்களுக்குத் தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப்பட வேண்டும். இதற்கென தமிழ் ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும்; போதிய ஊழியர்கள் இல்லை என்று காரணம் காட்டி தமிழ்மொழி அமுலாக்கலில் அசிரத்தை காட்டக் கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தமிழ்மொழி அமுலாக்கத்தில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை என்று அமைச்சர்கள் சாகுல் ஹமீதும், எம். எல். எம். அபுசாலியும் கூட்டத்தில் முறையிட்டனர். [ஒ-எ]

---


உ

உடுப்பிட்டி - வடக்கு

நெற்கொழு வைரவர் கோவில்

மேற்படி உற்சவத்தை முன்னிட்டு 06-08-1992 வியாழக்கிழமை விசேட மேளக் கச்சேரியும் திருவீதி உலாவும் நடைபெறும்.

சொற்பொழிவு: செல்வி குமுதினி தங்கவேல் [ஆசிரியர்] அவர்கள்

பட்டி மன்றம்: திரு. இ. நடராஜா ஆசிரியர் [நடுவர்]

வில்லிசை: 'வில்லிசைக் கலாபூபதி' 'கலைமாமணி' எஸ். எஸ். சர்மா அவர்களின் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்

விடயம்: காலனைத் தடுத்த காரிகை

— திருவிழா உபயகாரர்கள்:

[22035]



C. C. A. யாழ்ப்பாணம்.

A/L 1993

கணக்கியல் திரு. ஸ்ரீ

பங்குடமை

சனி, ஞாயிறு 2 — 3

மாற்று உண்டியல்

சனி, ஞாயிறு 11 — 12

குறிப்பு ★ இரண்டு மணிநேர வகுப்புக்கும் ஒரே கட்டணமே அறவிடப்படும்.

★ குறிப்பிட்டளவு மாணவர்களுக்கே அனுமதியுண்டு.

ஆரம்பம்: 08 - 08 - 1992

[சி-2991]


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சங்கரன் மனோகரன்

தோற்றம்: 05 - 06 - 1955

மறைவு: 05 - 08 - 1984

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அப்பா - A. சங்கரன்
அம்மா - ச. லட்சுமிஅம்மாள்
சகோதரர், சகோதரி.

"சுபாஸ் ரூறிஸ்ற் ஹோட்டல்"
37, விக்டோரியா றோட்,
யாழ்ப்பாணம். (சி/3010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# இராணுவத்தின் இரும்புக் கால்

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில், அது வழங்கும் உத்தரவுச்சீட்டு (பாஸ்) இல்லாமல் எவரும் வாழ முடியாது! இராணுவத்தின் உத்தரவுச்சீட்டுப் பெறாதவர்கள் அந்தப் பகுதியில் வாழ்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது!

இந்தச் செய்தியைப் படித்ததும், அடையாள அட்டையை ஒவ்வொரு பிரசையும் வைத்திருக்கக் கட்டாயப்படுத்தும் சட்டமூலம் (அறுபதுகளின் பிற்பகுதியில்) கொண்டு வரப்பட்டபோது ஊர்காவற்றுறை உறுப்பினராக இருந்த வ. நவரத்தினம் நாடாளுமன்றத்தில் கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது

நாய்க்குக் கழுத்தில் பட்டி கட்டுவது போல, 'தமிழனுக்குப் பட்டி கட்டும் அடிமைச் சின்னமே இந்த அடையாள அட்டை — என்று அவர் எதிர்ப்புத் தெரிவித்தார், அந்த அடையாள அட்டை எப்படித் தமிழனை இப்போது காட்டிக் கொடுக்கிறது, ஆட்டிப்படைக்கிறது என்பதை நடைமுறையில் பார்க்கிறோம்!

விடுதலைப் புலிகள் வசம் உள்ள தமிழ்ப் பிரதேசங்களை இராணுவம் கைப்பற்றுவது அங்கு சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்கே என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது. உண்மை அதுவல்ல. தமிழ் மண்ணில் இராணுவ அடக்குமுறை நிர்வாகத்தை உருவாக்குவதே உள்ளார்ந்த நோக்கம்.

சனநாயகம் உண்மையாகப் பேணப்படும் ஒரு நாட்டில், அந்நாட்டுப் பிரசை, தனது சொந்தப் பிரதேசத்தில் வாழ்வதற்கு எவரிடமும் உத்தரவு பெறவேண்டியதில்லை அது ஒவ்வொருவரினதும் வாழ்வுரிமை. வெளிநாடு ஒன்றுக்குச் செல்லும்போது தான், அந்த நாட்டு அரசின் அனுமதியைப் ['விசா' வைப்] பெறவேண்டும்.

இங்கே தமிழன் தனது சொந்தப் பிரதேசத்தில் வாழ்வதற்கு, பிறந்த மண்ணில் நடமாடுவதற்கு, இராணுவத்திடம் அனுமதி பெறவேண்டும் என்பது அவனது அடிப்படை உரிமைகளையும், சனநாயக உரிமைகளையும் பறிப்பதாகும். இந்த லட்சணத்தில் தான் ஜனாதிபதி பிரேமதாச சனநாயகம் பற்றிப் பெரிதாகப் பீற்றிக் கொள்கிறார்.

வவுனியாவில் தமிழ்ப் பிரதேசத்தில் வாழ்பவர்கள்— அந்தப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதற்காக — உத்தரவுப் பத்திரம் பெறவேண்டும் என்று வற்புறுத்துவது, கட்டாயப்படுத்துவது, எச்சரிப்பது இராணுவ ஆட்சியின் முதற்படியே!

இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் மனங்களை வெல்ல வேண்டும்; அதன் மூலம் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்க முடியும் என்று ஜனாதிபதி சித்தாந்தம் பேசியும், கனவும் கண்டுகொண்டிருக்க—

நடைமுறையில் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ ஆட்சிக்கு அத்திவாரம் போடப்படுகிறது!

வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவத்தைத் துரத்தாத வரை எந்த அரசியல் தீர்வு வந்தாலும், தமிழர்கள், சுதந்திரமாக, நிம்மதியாக — தொல்லையில்லாமல் — வாழ முடியாது என்பதற்கு இந்த உத்தரவுப் பத்திரம் நல்ல எடுத்துக்காட்டு. இராணுவ அடக்குமுறை என்ற இரும்புக் காலால் தமிழர்களை மிதிப்பதற்கான ஆரம்ப அறிவிப்பு. எனவே தமிழ்ப் பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வராமல் தடுப்பது எவ்வளவு பிரதானமானது என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

---

அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியம்!

# ஜனாதிபதி செயலகத்தில் அனைத்துக் கட்சி மாநாடு!

## திடீரென கடந்த வாரம் கூடியதன் மர்மம் என்ன?

கொழும்பு, ஆக. 5

கடந்த வாரம் திடீரென அனைத்து அரசியல் கட்சிகள் மாநாடு ஜனாதிபதி செயலகத்தில் கூடியது.

நீதித்துறை மற்றும் உயர் கல்வி அமைச்சர் சாகுல் ஹமீது தலைமை வகித்தார்.

இம் மாநாடு திடீரென கூட்டப்பட்டது அரசியல் வட்டாரங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

ஆரம்பக் கட்டங்களில் இம் மாநாட்டில் 17 அரசியல் கட்சிகள் பங்குபற்றி வந்தன.

ஆனால் கடந்த வாரம் நடந்த மாநாட்டில் ஏழு கட்சிகளின் பிரதிநிதிகளே கலந்து கொண்டனர். அவர்களும் ஜனாதிபதி மாநாட்டுக்குத் தலைமை வகிக்காதது குறித்து தமது அதிருப்தியை மாநாட்டில் தெரிவித்தனர்.

மாநாடு இப்படித் திடீரென கூட்டப்பட்டது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, லிபரல் கட்சி ஆகியன தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தன.

எப்படியாயினும், கடந்த வாரம் நடத்தப்பட்ட இம் மாநாட்டில் இரண்டு சபைகளை அமைக்கும் தமது யோசனையை லிபரல் கட்சித் தலைவர் சணக அமரதுங்க சமர்ப்பித்தார்.

இனப்பிரச்சினை குறித்து தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து முக்கியத்துவத்தை இழந்து விட்ட அனைத்து அரசியல் கட்சிகள் மாநாடு கடந்த வாரம் கூட்டப்பட்டதன் மர்மம் என்ன என்று அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

[ஒ-எ]

## ராஜீவ் கொலை வழக்கு: விசாரணை தாமதமாகும்

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை இந்த வருடம் செப்டெம்பருக்குப் பின்னரும் ஆரம்பமாவது தாமதமாகலாம் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

இக் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையர்களில் பெரும்பாலோர் இந்தியப் பொலீஸாரால் பதிவு செய்யப்பட்ட தமது வாக்குமூலங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சென்னை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ் வழக்குகள் தொடர்பான விசாரணை முடிவடையும் வரை, கொலை வழக்கு விசாரணை ஆரம்பமாவது தாமதமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

'தடா' சட்டத்தின் கீழ் உதவி பொலீஸ் அதிபர் தரம் அல்லது அத்தரத்துக்கு மேற்பட்ட தரத்தைச் சேர்ந்த பொலீஸ் உத்தியோகத்தர்களால், 'தடா' சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்படும் நபர்களின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஆனால் தமது வாக்கு மூலங்கள் இச்சட்ட விதிக்கு முரணான முறையில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக, இலங்கையர்களான பல சந்தேக நபர்கள் சென்னை நீதிமன்றதில் தாக்கல் செய்த வழக்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-எ)

---

## விதை உருளைக்கிழங்கு

யாழ்ப்பாணம், ஆக. 5

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு கடன் அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.

விதை உருளைக்கிழங்கின் தேவையை அரச அதிபர் சமநலசேவை நிலையத்திடம் கோரியுள்ளார்.

(இ-3)

## மாதாந்த உதவிப் பணம்

வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சுன்னாகம்-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் 1992 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் இப்போது வழங்கப்படுகின்றன.

சுன்னாகம் கிழக்கு கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்து இந்தக் கொடுப்பனவுகள் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

(அ)

---

உ



## நில்லாது துன்பங்கள் நீங்கும்!

நல்லூரின் கந்தா வுனைநாடி வந்தவர்க்குப்
பொல்லாதன வெல்லாம் போகுமே - நில்லாது
துன்பங்கள் நீங்குஞ் சுகவாழ்வு கைகூடும்
இன்பங்கள் பொங்கும் இனிது.

– வேலணை வி. சி. இராசரத்தினம்.

---

# வடக்கு-கிழக்கைப் பிரிப்பதால் நிரந்தர சமாதானம் வந்துவிடுமா?

## இருப்பதில் இருந்து மேல் நோக்கிப் போகலாமே அன்றிக் கீழ்நோக்கி அல்ல!

வடக்கில் யுத்தம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தெரிவுக் குழு கூட்டங்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இந்தியா புலிகளைத் தடைசெய்திருப்பதுடன் ராஜீவ் கொலை தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர்களை நாடு கடத்தும்படி கோருவதற்கான சட்ட நுணுக்கங்களை தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இதன் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தொண்டமான், கத்தோலிக்கத் தலைவர்கள், புத்த பிக்குமார் என்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்து போயின.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வா இராணுவத் தீர்வா என்ற கருத்தில் ஆட்சியாளர்கள் மத்தியில் நிச்சயமற்ற நிலைமை அல்லது ஒரு சாரார் ஒன்றையும் மற்றைய சாரார் இன்னொன்றையும் வலியுறுத்தும் நிலைமை இருப்பதாகவே தெரிகிறது. யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவத் தாக்குதல்களின் போது சில ஆட்சியாளர் தரப்புக் கருத்துக்கள் புலிகளை இராணுவ ரீதியில் முறியடித்த பின்னரே அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும் என்று கூறுவதாக பத்திரிகை செய்திகள் வெளிவந்துள்ளன. அதேவேளை தெரிவுக்குழுவில் ஓர் இணக்கமான முடிவு ஏற்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் கூறப்பட்டு, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் கூட்டங்கள் நிகழ்ந்தும் இருக்கின்றன.

தெரிவுக்குழுவின் ஓர் அரசியல் தீர்வுக்கான இணக்கத்தை ஈட்டுவதற்கான நம்பிக்கை தரக்கூடிய அறிகுறி ஒன்றும் இன்னும் ஏற்படவில்லை. அதில் இப்போது பிரதானமாக எழுந்துள்ள பிரச்சினை வடக்கையும், கிழக்கையும் இணைப்பதா அல்லது பிரிப்பதா என்பதே. வடக்கும், கிழக்கும் தற்காலிகமாக இணைந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தின் மாகாண சபைச்சட்ட மூலத்தில் இருந்து மேல் நோக்கிய திசையில் தீர்வுக்கான புள்ளி இருக்க முடியுமேயன்றி கீழ் நோக்கிய திசையில் இருக்க முடியாதென்பதை முதலில் இது பற்றி சிந்திப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் இங்கு உரிமைக்காக போராடும் தமிழ் பேசும் மக்கள் தமக்கு கிடைத்திருந்த ஒன்றே ஒன்றையும் இழந்து விட ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இது புரியாமல் அண்மையில் வடக்கும், கிழக்கும் பிரித்து நிர்வகிக்கப் படும் ஒரு யோசனையை தெரிவுக் குழுவின் செயலகம் முன்வைத்திருந்ததும் அதனை அனைத்து தமிழ்க் கட்சிகளும் தொண்டமானும் எதிர்த்ததும் தெரிந்ததே.

இங்கு வடக்கும், கிழக்கும் பிரிக்கப்படுவதற்கான என்ன அவசியம் உள்ளது என்ற கேள்விக்கு பெரும்பான்மையினர் தரப்பில் சில விநோதமான பதில்கள் உள்ளன. அதிலொன்று இரண்டையும் சேர்த்து விட்டால் தனி நாட்டுக்கான [illegible] செய்யப்படாத பட்சத்தில் தான் போராட்டங்கள் உருவாகின்றன. மக்களின் அபிலாசைகள் நிறைவு செய்யப்படுகையில் போராட்டத்துக்கான தேவை அற்றுப்போய் விடும் என்பதையும், மாறாக அது மறுக்கப்படும் போது தான் அது போராடத் தூண்டும் என்பதையும் புரிந்து கொண்டு இப் பிரச்சினையில் வடக்கையும், கிழக்கையும் பிரித்து விடுவது நிரந்தர சமாதானத்தைத் தருமா என்பதை இவர்கள் சிந்திக்க வேண்டும்.

மேலும் தமிழ்க் கட்சிகள் வாதிடுவது போல் மற்றைய மாகாணங்கள் விரும்பினால் விரும்பப்பட்டவை சேர்ந்து கொள்வதை இவ்வளவு கடுமையான பிரச்சினையாக இவர்கள் பார்ப்பார்களா என்பதையும் ஒரு முறை சிந்தித்து பார்க்க வேண்டும்.

அடுத்த இன்னொரு வாதம் இப்பகுதியில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகள், பாதுகாப்பு என்னாகும் என்ற கேள்வியாகும். இதில் தமிழ்க் கட்சிகள் கேட்கும் ஒரு சிந்திக்கத்தக்க கேள்வி. வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குள் வாழப் போகும் மூன்று லட்சம் சிங்கள மக்களின் கதி பற்றி இப்போது சிந்திக்கும் இவர்கள் வடக்கு-கிழக்கிற்கு வெளியே சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்ற, 20 லட்சம் தமிழ், முஸ்லிம் மக்களது உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பாக இது வரையில் சிறுபான்மையினர் எவரும் அரசியல் அமைப்பு ரீதியான பாதுகாப்பு ஒழுங்கமைப்பை கோரவில்லை.

பெரும்பான்மையினர் தாமாகவே உணர்ந்து அதைச் செய்து கொடுக்கவும் [இத்தனை கலவரங்கள் நிகழ்ந்து முடிந்து விட்ட பின்னும்] முன்வரவில்லை என்பதை மனச்சாட்சியின் பக்கத்தில் சற்று எடுத்து பார்த்துள்ளார்களா; என்பது.

மேலும், 3லட்சம் சிங்கள மக்கள் இங்கு வசிக்கிறார்கள் என்பதற்காக காலாகாலமான பாரம்பரிய உறவுகளைக் கொண்டு இருக்கும் மற்றைய மக்கள் இணைந்து வாழக் கூடாது என்பது நியாயமுள்ள ஒரு வாதமும் அல்ல. இருப்பினும் இச் சிங்கள மக்களுக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏனைய சிறுபான்மையினருக்கு இருக்கும் எல்லா உரிமைகளையும் உத்தரவாதம் செய்ய தயார் என்று தமிழ்க் கட்சிகள் நாலம்சத் திட்டத்தில் வழிவகை கூறியுள்ளன. அதே வேளை சிங்கள மக்கள் வாழும் பகுதிகளை அவற்றை அண்டி இருக்கும் சிங்கள மாகாணங்களோடு இணைத்து விடும் வழி வகைகள் பற்றியும் சிந்திக்கப்படுகின்றன. எனவே இவை எல்லாம் வடக்கையும், கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்பதற்கான வலுவான காரணங்கள் அல்ல.

இந்நிலையில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்ற ஒரே களமான தெரிவுக் குழுவில் சரியான ஒரு,ஒருமித்த தீர்வு ஈட்டப்படுமா என்பது ஒருபுறம் கேள்வியாக நிற்க மறுபுறத்தில் நடந்து கொண்டு இருக்கும் இந்த யுத்தம் அரசால் எவ்வாறு இனிக் கையாளப்படப் போகிறது என்பது இன்னொரு கேள்வியாக நிற்கிறது.

★

நன்றி: அருவி
(1992 ஆடி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிங்கள மீனவர் விடுவிப்பு



விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் இருந்த மூன்று சிங்கள மீனவர்கள் நேற்று முன்தினம் குருநகரில் வைத்து விடுவிக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.

மீனவர்கள் மூவரையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்து கடற் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மறவன் (ஸ்ரனி மாஸ்டர்) உரையாற்றுவதையும், அவருக்கு அருகே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமை அதிகாரி திரு. சுவான் சூ அமர்ந்திருப்பதையும் மேற்படத்திலும் —

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் மூவரையும் கீழ் படத்திலும் காணலாம். (உ-5)

# 'ஹெல உறுமய' அணியுடன் பேசுவதற்கு சிறிமா முடிவு

சுதந்திரக்கட்சியில் உள்ள "ஹெல உறுமய" அணி எம்.பிக்களை அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அக்கட்சியின் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தீர்மானித்திருக்கின்றார்.

கட்சியின் நலன்களுக்குப் பாதகமாக இருப்பதாகத் தாம் கருதும் சகல நடவடிக்கைகளையும் கைவிடும்படி "ஹெல உறுமய" அணித் தலைவர்களிடம் அப்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரிக்கை விடுப்பார் என்றும் —

அதற்கு "ஹெல உறுமய" அணி இணங்காத பட்சத்திலேயே, அந்த அணி மீது தடை விதிப்பது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-எ]

# அரசனாக வருவதற்கு நான் முயற்சிக்கவில்லை

## இப்படிக் கூறுகிறார் தொண்டா

கொழும்பு, ஆக. 5

"அரசனாக வர நான் முயற்சிக்கவில்லை" — இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

அத்தனகலையில் நடந்த பாராட்டு விழாக் கூட்டத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசியபோது "அரசனை உருவாக்குபவராக இருந்து வரும் அமைச்சர் தொண்டமான் இப்போது அதற்கும் மேலான பதவியை அடைய இலக்கு வைத்துள்ளார்" — என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே திரு. தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. தொண்டமான் மேலும் சொன்னதாவது:-

"அரசியல்வாதி என்ற முறையில் எனது வரையறை எனக்குத் தெரியும். இந்த அரசியல் விளையாட்டில் நான் நீண்ட காலமாக ஈடுபட்டு வருகின்றேன். அரசனாக மாற விரும்பும் அபிலாஷை எனக்கு இல்லை. அப்படி எனக்கு இருப்பதாகக் கூறுவது இன உணர்வைத் தூண்டிவிடும் வெறும் அரசியல் தந்திரமாகும்" — என்றார்.

## 1991 ஜி. சீ. ஈ. (உயர்தரம்)

# இசை, நடன பாடங்களின் செய்முறைப்பரீட்சை 15 இல்

யாழ்ப்பாணம், ஆக. 5

1991 ஜி. சீ. ஈ. (உயர்தர) விசேட பரீட்சையின் இசை, நடன செய்முறைப் பரீட்சைகள் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் எதிர் வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை, மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய பிரவேசப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலைப் பரீட்சார்த்திகளுடன் தொடர்புகொண்டு அனுமதி அட்டையில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அவர்களை தவறாது பரீட்சைக்கு சமூகமளிக்கச் செய்ய வேண்டும் என்றும் —

தற்பொழுது நடைபெறும் ஜி. சீ. ஈ. (உயர்தர) — 1992 பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகள் நேரமாற்றம் செய்ய வேண்டியேற்படின் பரீட்சகர் குழுவிடம் நேரில் சென்று மாற்றுத் திகதியை ஆகஸ்ட் 25 இற்கு முன் தவறாது செய்துகொள்ள வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். [உ-162]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 231/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உற்சவம்

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமான் ஆலயக் கொடியேற்றம் இன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். [உ-99]

# சங்கிலியை அறுக்க முயன்ற பெண் கைது!

யாழ்ப்பாணம், ஆக. 5

நல்லூர் உற்சவத்தின்போது தங்கள் தங்கச் சங்கிலிகள் திருட்டுப் போயுள்ளதாக மூன்று பெண்கள் தமிழீழக் காவல்துறை உற்சவ காலப் பணிமனையில் புகார் செய்துள்ளனர்.

இதே வேளை மற்றொரு பெண்ணின் சங்கிலியை அறுக்க முயன்ற பெண் ஒருவரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

பக்தர்களால் தவறவிடப்பட்ட ஆண்களுக்கான இரண்டு கைக்கடிகாரங்கள், பணப்பை ஒன்று, சைக்கிள் திறப்புக்கள் என்பன காவல்துறை பணிமனையில் உள்ளதாகவும், உரியவர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டிப் பெறலாம் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். [அ-3]

## திட்டமிட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினரை வடக்கிலும், புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டவர்களை மற்ற இடங்களிலும் இராணுவ அதிகாரிகளால் சமயப்படுத்தப்படுவதின் சக்தி அற்ற விளைவு என்று கூறப்படுகிறது.

இவற்றை நோக்கும் போது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்பது புலனாகிறது.

9 வருட காலமாக நடந்து வரும் சண்டைகளினால் இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை முற்றாக மேற்கொள்ள முடியாதுள்ள நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [அ-]

## புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பவள்" கவசவாகனத்தை புலிகள் கைப்பற்றி, பின்னர் அதனை முற்றாக அழித்தனர்.

அதிரடித்தாக்குதலில் எல் 3 இலகு இயந்திரத் துப்பாக்கிகள், ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கி, ஜி 3, ஏ-3, ரக துப்பாக்கிகள் உட்பட 14 நவீன ரகத் துப்பாக்கிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகள் போராளியான முத்துக்குமரன் அல்லது எமில்டன் (சோமசேகரம் நிமலநாதன் - வவுனியா) வீரமரணமடைந்தார்.

தாக்குதலையடுத்து மாமடு இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பகுதியில் ஹெலி ஒன்று 3 மணி நேரம் 50 கலிபர் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தியது.

கடந்த வாரம் கிழக்கில் அதிரடித் தாக்குதல்களை நடத்தி இராணுவத்தினரைக் குழப்பம் அடையச் செய்துள்ள புலிகள் வடக்கில் அத்தகைய தாக்குதலை ஆரம்பித்திருப்பது —

தாம் இரண்டு பிரதேசங்களிலும் பலமுள்ளவர்கள் என்பதைக் காண்பிப்பதற்காகவே என்று —

அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

24 மணி நேரத்தில் விடுதலைப் புலிகள் கிழக்கிலும் வடக்கிலும் 29 படையினரைக் கொன்றிருப்பதாக ஏஜன்சிச் செய்திகள் கணக்குக் காட்டி விமர்சனம் செய்தன. [அ-எ-3]

## 'டுவோரா'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துவது, கடலில் கடற்படையினர் அதிக நேரம் கடமையில் ஈடுபடுத்தப்படுவது ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று அ... டுள்ளது. [ஓ-எ]

# ஒலிம்பிக் போட்டி முடிவு

லண்டன், ஆக. 5

ஒலிம்பிக் பந்தயங்களில் நேற்று முன்தினம் வரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகளின்படி, முன்னணி வகிக்கும் நாடுகள் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண். |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 32 | 27 | 20 |
| அமெரிக்கா | 20 | 24 | 22 |
| ஜேர்மனி | 16 | 12 | 21 |
| சீனா | 14 | 19 | 12 |
| ஹங்கேரி | 10 | 07 | 08 |
| ஸ்பெயின் | 10 | 01 | — |
| தென் கொரியா | 08 | 03 | 09 |
| பிரான்ஸ் | 07 | 05 | 12 |
| அவுஸ்திரேலியா | 06 | 08 | 09 |
| கனடா | 06 | 01 | 06 |
| இத்தாலி | 04 | 05 | 08 |
| ருமேனியா | 04 | 04 | 06 |
| பிரிட்டன் | 04 | 03 | 08 |
| கியூபா | 04 | 02 | 07 |
| ஜப்பான் | 03 | 07 | 07 |
| போலந்து | 03 | 04 | 06 |
| செக்கொஸ்லேவேகியா | 02 | 02 | 01 |
| நோர்வே | 02 | 02 | — |

# கரடியனாறு தாக்குதலில் 6 வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், ஆக. 5

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கரடியனாறில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது புலிகள் தரப்பில் இரு பெண் போராளிகள் உட்பட 6 வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

கப்டன் நடேஸ்வரன் - நடேஸ் (சிவகுரு சிறிகாந் - பெரியகல்லாறு), லெப்டினன்ட் விவேக்கா (குணதுங்க சத்தியவாணி-வாழைச்சேனை), லெப்டினன்ட் நிலாந்தி (தர்மலிங்கம் ராஜேஸ்வரி - மொரக்கொட்டாஞ்சேனை), 2ஆம் லெப்டினன்ட் சேந்தன் (பொன்ராமன் புஸ்பராசா கதிர்காமம் - அம்பாறை) ஆகியோரும் —

மற்றும் வீரவேங்கை தமிழ்வதனன் — மயூரன் (கந்தசாமி கருணராசா — வாழைச்சேனை), வீரவேங்கை பெருமாள் — வில்வன் (சித்திரவேல் யோகராசா—வெல்லாவெளி) ஆகியோருமே வீரமரணம் அடைந்தவர்களாவர். (த)

## சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம், ஆக. 5

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினம் இன்றாகும்;

இந்து மன்றங்கள், இந்து இளைஞர் மன்றங்கள் ஆகியன சுந்தரர் குருபூசையைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளன;

கொழும்புத்துறை மன்றுளாடும் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயம் உட்பட மற்றும் பல ஆலயங்களிலும் சுந்தரர் குருபூசை நடைபெறவுள்ளது.

இதே சமயம் —

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று மாலை 4 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர்ஸ்வாமி ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாவை கொண்டாடுகின்றனர்.

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தவிநாயகர் ஆலயத்திலும் இன்று மாலை 5 மணியளவில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை கொண்டாடப்படும். (உ-30-100)

## செஞ்சிலுவைச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைவராக திரு ஏ. இ. செபநாயகமும், உப - தலைவராக திரு. இ. வேலாயுதமும், செயலாளராக திரு. எஸ். கணநாதனும், பொருளாளராக திரு. எஸ். தியாகராசாவும், உறுப்பினராக திரு. எஸ். குருபரனும் செயற்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [அ-3]

## அனுமதி அட்டை தபாலில்

யாழ்ப்பாணம், ஆக. 5

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் நேற்றுத் தபாலில் அனுப்பட்டதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

1991ஆம் ஆண்டுக்கான பரீட்சையுடன், 1990 ஆம் ஆண்டில் நடைபெறாத பரீட்சையும் இம்முறை நடத்தப்படவிருக்கிறது.

வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை வேலணைக் கோட்ட அலுவலகத்தில் பெறலாம் என்றும்—

குடாநாட்டுக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்திகளில் சிலரின் அனுமதி அட்டைகள் யாழ்ப்பாணம் வந்துள்ளதால், அவற்றை கல்வி அலுவலகத்தில் பெறலாம் என்றும்— கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [அ-3-162]

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கிய ரத்தினம் கந்தையா

திருமதி பாக்கியரத்தினம் கந்தையா 02-08-92 ல் காலமானார். இவர் காலம்சென்ற K. S. கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மபாலன், குணபாலசூரியர், ஜெயலெட்சுமி இராசலெட்சுமி, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம், சண்முகரட்ணம், மகேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-08-92 அன்று துண்டி மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
குணபாலசூரியர்
(மகன்)

39, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

(22040)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org